அசல் வழக்கு எண். 91/2018 தேதி. 22.11.2023

வா.சா.1 - தேவதர்ஷினி

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளவீடு செய்த போது நான் இருந்தேன். நில அளவையர் தாவா சொத்தினை இருக்கும் இடத்தை வைத்து அளவீடு செய்தார். சர்வே கல்லை நிர்ணயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி முருகாயி இடத்தை அளவீடு செய்த போது அவரது இடம் சரியாக தான் இருந்தது. அஞ்சலை இடத்தை அளவீடு செய்த போது அவரது இடம் சரியாக தான் இருந்தது. முருகாயி மற்றும் அஞ்சலை ஆகியோருக்கும் எங்களுக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை. பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீட்டினை அரசு நிபந்தனைகளை மீறி எனது தாயார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

2. என் தாயார் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு உள்ள தாவா சொத்திற்கான பத்திரங்கள் பற்றிய விவரம் எனக்குதெரியும். 1ம் பிரதிவாதி முருகாயி அவரது சொத்தை 04.04.1989 ம் தேதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார். 2ம் பிரதிவாதி அஞ்சலை அவரது சொத்தை 16.02.1989 ம் தேதி பொன்னம்பலம் என்பவரிடம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு சொந்தமான காலி இடத்தை அபகரிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சொத்து விவரத்தில் உள்ள நான்கெல்லை விவரம் தவறானது என்றால் சரியல்ல. காவல் துறையில் புகார் மனு கொடுத்ததற்கான மனு இரசீது தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை அரசு விதிகளுக்கு முரணாக கிரையம் பெற்றுள்ளோம் என்றும், தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் எந்த காலத்திலும் எங்களிடம் இடையூறு செய்யவில்லை என்றும், தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/- P.பாலமுருகன்

**Principal District Munsif,**
**Kulithalai.**